# New Gen தமிழன்

இதழ் 3 மார்ச் 2013

Published by Prime Point Foundation




கவர் ஸ்டோரி - குடியின் கொடுமை - ஒரு உண்மைச் சம்பவம்

## இந்த இதழில்

2 தலையங்கம்

5 கவர் ஸ்டோரி

8 உலக பெண்கள் தினம்

10 சமஸ்கிருத மொழி

11 சுமித்ரா – புத்தக விமர்சனம்

13 துருக்கி திரைப்படம்

14 சட்டீஸ்கர் – **Core PDS**

இமெயிலில் தொடர்பு கொள்ள

newgenthamizhan@gmail.com

## தலையங்கம்

## இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கேட்டு தமிழக மாணவர்களின் போராட்டம்




இலங்கையில் நடந்தது இனப் படுகொலை என்று அறிவிக்கக் கூறியும், ராஜபட்சே போர்க் குற்றவாளி என்று அறிவித்து சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தக் கூறியும் தமிழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார்கள்.

தமிழகத்தில், பல வருடங்களாக , எந்த ஒரு உயிர் போகிற பொதுப் பிரச்சினைக்கும் வெளியில் வந்து போராடாத மாணவர்கள் இன்று போராட்டம் என்று இறங்கி இருப்பது பாராட்டுதலுக்கு உரியது.
அரசியல் கட்சிகளை ஒதுக்கி பொது மக்களின் ஆதரவை பெற்று இப் போராட்டத்தை அடுத்த நிலைக்கு எடுத்து செல்வதே எங்கள் நோக்கம் என்கிறார்கள் மாணவர்கள்.
இதற்கே ஒரு தனி 'சபாஷ்' கூறலாம். ஆனால்,

மாணவர்கள் கையில் எடுத்திருக்கும் பிரச்சினை சாதாரணமானது அல்ல.

அரசியல் என்பதன் பால பாடம் தெரியாத , அரசியல் பார்வை என்பதை முற்றிலுமாக ஒதுக்கிய பாடத் திட்டங்களை படித்து வளர்ந்த மாணவர்கள் இதை எப்படி கையாளப் போகிறார்கள் ?

தமிழகத்தின் திராவிட அரசியல் தான் மாணவர்கள் பார்த்து வளர்ந்த அரசியல். அது சீரழிந்த அரசியல். அதனை அடித்தளமாக வைத்தும் இந்த பிரச்சினையை அணுக முடியாது.

மாணவர்கள் செய்ய நினைத்தாலும் அதை சரி வர செய்யமுடியாமல் இருப்பதற்கு, அவர்களை சரியான வகையில் தயார்படுத்தாத கல்வி முறைகள் ஒரு மிகப் பெரிய காரணம். மாநில அளவிலான அரசியலே தெரியாத நிலையில், மாநிலங்களுக்கு இடையிலான அரசியல் மற்றும் மத்திய அரசியல், அனைத்து மாநிலங்களையும் இணைத்த இந்திய அரசியல் , இவற்றை தாண்டிய அண்டை நாடுகளுடனான வெளியுறவு அரசியல், உலக அரசியல், புவி சார் அரசியல், etc ... என்று பலப் பல இருக்கின்றன. இவற்றைப் பற்றிய அடிப்படை புரிதல் இல்லாமல், ஈழப் பிரச்சினை பேச முடியாது. இதை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறதா நம் கல்வி முறை? இல்லை என்றே சொல்ல வேண்டும் .

படிக்காத அரசியலை, மாணவர்கள் , பார்த்து, தெரிந்து கற்றுக் கொள்வதற்கு தலைவர்கள் இருக்கிறார்களா? அவர்களின் சரியான வழிகாட்டுதல்கள் இருக்கிறதா என்றால் அதற்கும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்திய மாநிலங்களை, இந்தியா என்ற ஒரு குடையின் கீழ் உணர்வு பூர்வமாக இணைத்திருப்பது காந்தியும், நேதாஜியும், விடுதலைப் போராட்ட வரலாறுக்கு 65 வயதே ஆகி இருப்பதுவும், தேசிய கீதமும் தான் . மற்றபடி, இந்தியாவின் federal setup - ல் , மொழிவாரி மாநிலங்கள், அந்தந்த மண்சார்ந்த பிரச்சினைகள், மொழி சார்ந்த பிரச்சினைகள், கலாச்சாரம் சார்ந்த பிரச்சினைகள், வித்தியாசமான அணுகுமுறைகள் என்று பலவற்றால் உள்ளபூர்வமாக பிரிந்து கிடக்கின்றன.

இலங்கைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் , வட மாநிலத்தவருக்கு அதன் முழு சாரம் தெரியவில்லை. புரிவதும் இல்லை. இந்தியாவில் உள்ள ஒரு மாநிலத்தின் பிரச்சினை என்றே பார்க்கப் படுகிறது. அதே போல , தமிழர்களில் எத்தனை பேருக்கு காஷ்மீர் பிரச்சினையின் ஆழம் தெரியும் ? வட கிழக்கு மாநிலங்களின் பிரச்சினை புரியும் ? என்ற கேள்வியும் எழுகிறது. இந்த இடைவெளியை இணைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் படவேண்டும். அதற்கான காலமும், அவசரமும், அவசியமும் வந்துவிட்டது.

மாநில மொழி செய்திதாள்கள் அந்தந்த மாநில செய்திகளுக்கே முக்கியத்துவம் தருகின்றன. அது தவிர டெல்லி செய்திகளும், மத்திய அரசு செய்திகளும் சிறிதாக இடம் பெறுகின்றன.
ஆங்கில செய்திதாள்கள் விகிதாசாரத்தில் சற்றே வித்தியாசம் காட்டி செய்திகள் வெளியிடுகின்றன.
காட்சி ஊடகங்களும் இதே நிலை தான்.

அண்டை மாநிலங்கள், பிற மாநிலங்கள், அனைத்து மாநிலங்கள் என்று அங்கு நடக்கும் விஷயங்கள் , அரசியல், நிர்வாகம் குறித்த செய்திகள் , மக்களுக்கு தெளிவாக, எல்லா நாட்களும் கிடைக்கும் வகையில் ஊடகங்கள் தருவதில்லை.

சுருங்கச் சொன்னால் , ஏதாவது பரபரப்பு செய்தியாக இருந்தாலொழிய , அண்டை மாநிலமான கேரளாவிலோ, கர்நாடகாவிலோ, ஆந்திராவிலோ என்ன நடக்கிறது என்பதை தமிழர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. அன்றாட தொடர்பு நிலை முற்றிலுமாக அற்றுப் போன நிலை தான்.
இன்றைய இன்டர்நெட் யுகத்திலும், அதை பயன்படுத்துபவர்கள் மிகக் குறைவே.

மொழி வாரியாக தனித் தனி தீவாக பிரிந்து கிடக்கும் மக்களுக்கு இடையில் உணர்வு பூர்வமான, உள்ள பூர்வமான பற்றுதலும், சக உணர்வும் ஏற்படுவதற்கு அன்றாட செய்தி பரிமாறல்கள் அத்தியாவசியமான ஒன்று.

120 கோடி என்பது மிகப் பலம் வாய்ந்த, உலகின் பல சரித்திரங்களை மாற்றி அமைக்கக் கூடிய மக்கள் சக்தி. ஆனால், சொந்த நாட்டிற்குள்ளேயே , உணர்வாலும், உள்ளத்தாலும் இணைக்கும் இணைப்புப் பாலம் இல்லாமல் பிரிந்து , விழலுக்கு இறைத்த நீராய் இருக்கிறது இந்த மாபெரும் மக்கள் சக்தி.

உணர்வாலும், உள்ளத்தாலும் இணைந்திருக்க வேண்டியதன் அவசியம் .., மாணவர்கள் தங்களின் இந்த போராட்டத்திற்கு வழிகாட்டுவதற்கு இங்குள்ள தலைவர்களை ஒதுக்கிய நிலையில், சுய பலன் இல்லாத , பிற மாநிலத்தை சேர்ந்தவர்களின் வழிகாட்டுதல்கள் கிடைத்திருக்க கூடும் என்பது தான்.

அமெரிக்கா , ஐரோப்பிய நாடுகள் பலவற்றில், தேர்தல் நடைபெறும்போது , அதன் ஆரம்பக் கட்டப் பணிகள்முதல் , தனிப் பட்ட முறையில் வேட்பாளர்களின் பிரசார வியுகம் எப்படி அமைய வேண்டும் , அதற்கான அறிக்கை தயாரிப்பு , ஊடகங்களை பயன்படுத்துவது , இன்ன பிற தேர்தல் களப் பணிகள் போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். நேரிடையாக ஈடுபடுவதால், தேர்தல் அரசியல், அதன் பின் வரும் அதிகார அரசியல் போன்றவற்றை முழுமையாக அதில் ஈடுபட்டு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு ஏற்படுகிறது .

இத்தகைய வாய்ப்புகள் இந்திய மாணவர்களுக்கு இல்லை.

அரசியலைமுற்றிலுமாக நீக்கிய பாடத்திட்டங்களும், செயல்முறை பங்களிப்புக்கான வாய்ப்புகளும் இல்லாமல், வழிகாட்டுதலுக்கான தலைவர்களும் இல்லாத இன்றைய இந்திய மாணவர்கள் தான் நாளை இந்தியாவை ஆளப் போகிறவர்கள் !!

கல்வியாளர்கள், அரசு, தேர்தல் ஆணையம் , சமூக ஆர்வலர்கள் என்று அனைத்து தரப்பிலும் இது குறித்து சிந்தித்து , தேவையான மாற்றங்களை கொண்டுவருவது மிகவும் அவசியம்.

**By Banu Gomes**

---

**National Seminar on 'Youth in Politics and Governance'**

&

**Sansad Ratna**
**Awards 2013**

Every year Prime Point Foundation and the ezine PreSense present Sansad Ratna Awards to the top performing Lok Sabha MPs. Sansad Ratna Awards 2013 will be presented to top performing MPs at Indian Institute of Technology, Madras campus on Saturday the 20th April 2013.

This function will be followed with one-day seminar on 'Youth in Politics and Governance'. Participants will have opportunity to interact with top performing MPs of India and Tamilnadu.

Interested persons may send mail to **prpoint@gmail.com.**
Please visit **www.sansadratna.in** for the past events.

No participation fee – Registration needed.

# கவர் ஸ்டோரி - குடியின் கொடுமை - ஆறாத வடு - அதிலிருந்து கிளம்பிய பீனிக்ஸ் பறவை போன்ற சாதனை பெண்

மதம் சார்ந்த இடங்களுக்குள்ளும், பள்ளிகளுக்குள்ளும், தனியார் நிறுவனங்களுக்குள்ளும் மது அருந்தியவர்கள் நுழையக் கூடாது என் அந்தந்த அமைப்புகள் தடை விதிக்கின்றன. ஆனால், நம் எல்லோருக்கும் பொதுவான சாலைகளில், நிதானம் தவறியவர்களை நடமாட விட்டது யார் குற்றம்? நாம் என்றோ தீண்டாமை பழகியிருக்க வேண்டிய குடிகாரர்கள் இன்று நம் பேச்சின், எழுத்தின் கருப்பொருளாய் மாறியிருக்கும் காலக் கொடுமை யார் குற்றம்?

மனதை திடப்படுத்திக் கொண்டு தொடர்ந்து படியுங்கள்.

பொதுவாக தோற்றுப்போக விரும்பாதவர்கள் எழுத்தாளர்கள். எழுதுவது சுமாராக இருந்தாலும், அந்த எழுத்துக்களை விட கவனத்தை ஈர்க்கும் எதையும், அவர்களின் பக்கங்களுக்குள் அனுமதிப்பதில்லை. சுற்றியிருக்கும் இந்தப் புகைப்படங்களிடம், என் வார்த்தைகள் நிச்சயம் தோற்கும் என்று தெரிந்தே எழுதுகிறேன்.

செப்டம்பர் 19, 1999 அதிகாலை 4 மணி. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் அருகே ஒரு நான்கு வழிச்சாலை. ரெஜ்ஜி, 18 வயது சராசரி அமெரிக்க இளைஞன். இரவு முழுக்க குடித்துவிட்டு, அதிகாலையில் தனது காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ரெஜ்ஜியைப் போலவே அவன் ஓட்டிக் கொண்டிருந்த காரும் கொஞ்சம் கொஞ்சமாய் நிதானம் இழந்து, எதிர் திசையில் வந்து கொண்டிருந்த ஒரு சிறிய காரின் மீது பலமாக மோதியது.



சம்பவ இடத்திலேயே சிறிய காரில் வந்த ஐவரில் இருவர் இறந்தனர். இருவர் பெரிய காயங்களின்றி மீட்கப்பட்டனர். கடைசி ஆளான ஜாக்குலினின் கால்கள், மோதலின் தாக்கத்தால் காரினுள் சிக்கிக் கொள்ள, அவர்கள் பயணித்த கார் பற்றி எரியத் தொடங்கியது. பெருந்தீயுடன் ஒரு நிமிடம் எரிந்து முடித்தப் பின், பலத்த தீக்காயங்களுடன் (3ஆம் நிலை தீக்காயங்கள், 60 சதவீத உடலில்) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் ஜக்குலின். உடலின் பெரும்பகுதி தீக்கிரையாகியிருந்தது.

*விபத்துகுள்ளான ஜக்குலின் பயணித்த கார் (மேல் படம்)*

*ஜாக்குலின் - விபத்திற்கு முன் – இன்று (படம் வலது)*



Jacqueline Saburido
September 19, 1999



விபத்துக்குப் பிறகு, தன் மகளை முதன் முறையாக மருத்துவமனையில் பார்த்ததைப் பற்றி, ஜாக்குலினின் தந்தை

கூறியது, 'அங்கே நினைவின்றி கிடந்தது என் மகள் தானா என எனக்குத் தெரிய எந்த அடையாளமும் இல்லாத வகையில் என் ஒரே மகளின் உடல் முழுக்க தீயில் கருகியிருந்தது. அவள் கால்களை வைத்தே அது என் மகள் தான் என உணர்ந்தேன். நான் அந்த நாட்களில் அழுததைப் போல் வேறு எப்போதும் அழுததில்லை. தனிமையில், தூக்கத்தில், விழிப்பில் என எப்போதும் அழுது தீர்த்திருக்கிறேன்.'



***இளம் ஜாக்குலின், பெற்றோருடன் (படம் இடது)***

பல ஆண்டுகள், மருத்துவர்களின் கடும் உழைப்பு, பல அறுவை சிகிச்சைகளுக்கு பிறகு ஜாக்குலினின் நிலை இது தான். விபத்துக்குக் காரணமான ரெஜ்ஜிக்கு 20 ஆயிரம் டாலர்கள் அபராதமும், ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கியது அந்நாட்டு நீதிமன்றம்.

செப்டம்பர் 19 ஆம் தேதி, அந்த அதிகாலைப் பொழுது வரை, ஜாக்குலின் ஒரு மிகவும் திறமைசாலியான, அழகான, பணக்கார அமெரிக்கப் பெண். இன்று, ஜாக்குலின், ஒரு தலைமுறையின் அடையாளம். குடி போதையில் வாகனம் ஓட்டுவதற்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பங்கேற்கிறார். விளம்பரங்களில் நடிக்கிறார். தன்னை போல பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுகிறார். உதவிகளை செய்து வருகிறார். தான் மனதளவில் இன்னும் பழைய ஜாக்கி தான் எனத் தன்னை போல பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்கிறார். பொறுமை, தைரியம், இலட்சியம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமாக இருக்கிறார். பெண்மைக்கு இன்னும் பேறு சேர்த்துள்ளார்.

இப்போது, ரெஜ்ஜியும், தான் திருந்தியிருப்பதாக சொல்கிறார்; ஜாக்குலினுடன், அவரது பிரச்சாரங்களில் பங்கேற்கிறார். ஆனால், ஐந்து குடும்பங்களின் வாழ்க்கையில், மீண்டு வர முடியாத அளவிற்கு துயரத்தால் நிறப்பியதற்கு எந்த நியாயமான பதிலையும் அவரால் தர முடியாது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.



***ரெஜ்ஜி (படம் இடது).***

இது எதோ ஒரு அமெரிக்க மாநிலத்தில், யாருக்கோ நடந்தேறிய கதை. சட்டமும், அதை நடைமுறைப்படுத்தும் விதமும் மிகத் தீவிரமாக பின்பற்றப்படும் ஒரு நாட்டில். இந்தியாவில், தமிழகத்தில் இந்த மாதிரி எத்தனையோ குற்றங்கள் நடந்தேறியிருக்கலாம். பணத்தாலோ, பயத்தாலோ மறைக்கப்பட்டிருக்கலாம். அல்லது பெரும்பாலான சம்பவங்கள், உயிரிழப்பில் முடிந்து இருக்கலாம். இந்த காரணங்களால், ஒரு சமூகமாக, நம் ஒட்டுமொத்த மனசாட்சியை உறுத்தும் ஜாக்குலின் போன்ற அடையளங்கள் நம்முள் இல்லை. என்றாலும், மது ஒட்டுமொத்த மனிதத்தின் நோய். நாளைய ஜாக்குலின் நீங்களாகவோ, நானாகவோ இருக்கலாம். நமக்கு விதிக்கபட்ட ரெஜ்ஜி, நாம் மளிகை சாமான் வாங்கும் கடைக்குப் பக்கத்தில் உள்ள மதுக்கடையில் இப்போது குடித்துக் கொண்டிருக்கலாம். நாளை நம்முடைய செப்டம்பர் 19 ஆக இருக்கலாம். பயப்படுங்கள்.

மதுவிலக்கிற்கான குரல்கள் சத்தமாய் ஒலிப்பதை கேட்கமுடிகிறது இந்நாளில். ஆனால், அரசியல், பொருளாதாரக் காரணங்களைச் சுட்டி மதுவிலக்கை தவிர்த்து வருகின்றன அரசுகள். என்றாலும்

அரசியலும், பொருளாதாரமும் புரியாத பெரும்பான்மையான மக்களுக்கு அரசு ஆற்ற வேண்டிய பெரிய கடமை உள்ளது.

குறைந்த பட்சம் சாலையோரங்களில் நடத்தப்படும் மதுக் கடைகளையாவது அகற்ற வேண்டும். வழிப் போக்கர்களின் தாகம் தீர்த்து அவர்களை உயிர்ப்போக்கர்களாக மாற்றிய கொடுமையை நாம் நமக்காக தேர்ந்தெடுத்த அரசாங்கமே நிகழ்த்தும் அவலட்சணம் போதும். உரிமம் இல்லாமல், தலைக் கவசம் இல்லாமல் வாகனம் ஓட்டுபவர்களை நன்றாக கவனிக்கும் அரசு, மூளையே இல்லாமல் வாகனம் ஓட்டும் குடிமகன்களை தேவையான அளவு கவனிப்பதாய் தெரியவில்லை. கொலை முயற்சி வழக்குத் தொடுத்து, வாழ் நாள் முழுக்க சிறையில் அடைத்தாலும் குறைவாகத்தான் படுகிறது. மாற்றுக் கருத்து இருப்பின், ஜாக்குலின், ரெஜ்ஜியின் புகைப்படங்களைப் பாருங்கள்.

இந்த உரைநடையின் தொடக்கத்தில், இந்தப் புகைப்படங்களை விட வலிமையான வார்த்தைகளை எவராலும் எழுத முடியாது எனக் கூறியிருந்தேன். அந்தக் கஷ்டத்தையும் எனக்கு வைக்காமல், ஜாக்குலினே மிக வலிமையான வார்த்தைகளை ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் கூறியிருக்கிறார். 'எனக்கு காதுகள் கிடையாது, மூக்கு கிடையாது, புருவங்கள் கிடையாது, கண்ணிமை கிடையாது, தலை மயிர் கிடையாது. இருந்தும் உங்கள் முன் உட்கார்ந்து இருக்கிறேன். இன்னும் எத்தனை முறையானாலும் உட்காருவேன், உங்களில் இன்னும் ஒருவராவது திருந்துவீர்களேயானால்!".

By இளங்கோவன்

---



தமிழ்நாட்டில் இன்று பல கிராமங்களில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்க்க்கூடிய மாணவர்களில் பெரும்பாலோர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார்கள். இந்த அதிர்ச்சியான நிலையை விளக்கி இளைஞர் பிரபாகரன் தயாரித்துள்ள ஒரு குறும்பட்த்தை (6 நிமிடங்கள்) கிளிக் செய்து பார்க்கவும்.

**http://youtu.be/A-Zkzbf0N_w**

# மார்ச் 8 - உலக பெண்கள் தினம். - உலக மயமாக்கலுக்கு பின் பெண்களின் நிலை எப்படி இருக்கிறது?

கல்வியை பொறுத்த வரையில், பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. பெண்கள் மருத்துவ துறை சார்ந்த படிப்புகளை அதிகம் தேர்வு செய்து படிக்கின்றனர். இன்ஜினியரிங் படிக்கும் மாணவிகள் வெறும் 15 சதவீதம் மட்டுமே.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புது புது கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் பெண்களின் பங்கு இல்லை என்பது தான் இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும் நிலமையாக இருக்கிறது .

பணியிடத்தில் , பெண்கள் மிக உயரிய பதவிகளை அடைவதில் சிக்கல் இருக்கிறது. பெரும்பாலான பெண்கள் mid level என்கிற அளவோடு தங்கள் பணியிட சாதனைகளை முடித்துக் கொள்கிறார்கள். இதற்கு காரணம் பெண்களின் குடும்ப பொறுப்புகள் . குடும்பமா, வேலையா என்றால் , பெரும்பாலான பெண்கள் , குடும்பத்தையே முதலிடத்தில் வைக்கிறார்கள். குடும்பத்தின் ஆதரவு இருந்தாலும், குழந்தைகளுக்கு தாயின் மீது இருக்கும் emotional dependency - ம் இதற்கு ஒரு முக்கிய காரணம். இது இந்தியப் பெண்களுக்கு தான் என்றில்லை. உலக பெண்கள் அனைவரும் இதை எதிர்கொள்கிறார்கள்.

இந்தியாவின் அனைத்து வகையான ஊடகங்களும் பெண்களை பல வகைகளிலும் பாராட்டிக் கொண்டும் , ஆணாதிக்க மனோபாவத்தை கடுமையாக சாடிக் கொண்டும் இருக்கும் வேளையில், சற்றே வித்தியாசமாக சென்னையை சேர்ந்த ஆண் bloggers சிலரிடம் இது குறித்து கேட்கப் பட்டது.
இதோ ஆண்களின் பார்வையில் பெண்கள் :

பெண்கள் பூப்பெய்தியதை ஒரு விழாவாக எடுத்து சிறு பெண்களை கூச்சப் படவைக்கும் சடங்குகள், பெண்கள் படித்து முடித்தவுடன் அவர்களை யார் கையிலாவது திருமணம் என்ற பெயரில் பிடித்துக் கொடுத்துவிடவேண்டும் என்று எண்ணுவது போன்றவற்றை விடுத்து, குடும்பங்கள்,அவர்களை சுதந்திரமாக தான் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்கிறார் முத்தையா ஸ்ரீராம்

சினிமாக்களில் பெண்களை மோசமாக , ஆபாசமாக சித்தரிப்பதோடு அல்லாமல், ஆண்களுக்கு அடங்கியவர்களாகவே தொடர்ந்து காட்டப் படுவது , சினிமா மேல் அதீத மோகம் கொண்ட சமூகத்தில் உள்ள மனிதர்களின் கண்ணோட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவை தடுக்கப் படவேண்டும் என்கிறார் ராம் திலக்.

தாயை மதிப்பவன், எந்த சூழ்நிலையிலும் பிற பெண்களை அவமதிக்க மாட்டான். பெண்களை அவர்களுடைய அறிவுக்காகவோ, செயலுக்காகவோ மதிக்கத் தெரியாதவர்கள் கூட , எல்லா பெண்களும் தாய் என்ற அந்தஸ்தை ஒரு நிலையில் அடைகிறார்கள் என்பதற்காகவே மதிக்க வேண்டும் என்கிறார் ஹரி கிருஷ்ணா .

இந்தியப் பெண்களை தாக்கும் Auto –Immune diseases :

1. **Hashimoto's thyroiditis.**
2. **Graves' disease**
3. **Multiple sclerosis (MS)**
4. **Myasthenia gravis**
5. **Systemic lupus erythematosus (lupus)**
6. **Rheumatoid arthritis**

இவை தவிர **Osteoporosis** போன்ற அனைத்து நோய்களையும் பட்டியலிட்டு, அதற்கான தடுப்பு மற்றும் வந்த பின் அதற்கான மருத்துவ முறைகள் குறித்து உள்ளார்ந்த அக்கறையோடு விவாதிக்கிறார் தீபக் ரகுராமன்.

இந்தியாவில்,பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடும் school dropouts 6-10 வயது வரைஉள்ள குழந்தைகள் 25 %. இதுவே 10-13 வயது குழந்தைகள் என்றால் அது 50% என்று அதிகரிக்கிறது என்று சொல்கிறது அரசு குறிப்பு [ Time Magazine dated April 29, 2010] . 23% பெண்

குழந்தைகள் பூப்பெய்தியவுடன், சரியான சானிடரி நாப்கின்ஸ் வாங்க முடியாததால் / கிடைக்காததால், பள்ளிப் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். [AC Nielsen- Plan India Survey ] . உலக அளவில் 40% [ 4 மில்லியன் ] குழந்தைத் திருமணங்கள் இந்தியாவில்தான் நடக்கின்றன [BBC dated October 2011]. 2010-ல் இருந்ததை விட 2011-ல் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 3 மில்லியன் அதாவது 30 லட்சம் குறைவு ! பெண் குழந்தைகள் பிறப்பதற்கே அனுமதி வேண்டி இருக்கிறது. இதையும் தாண்டி , பிறந்து விட்டால், பெண்கள் படிப்பதற்கு பிறர் அனுமதி வேண்டி இருக்கிறது.திருமணம் வேண்டுமா, வேண்டாமா?..குழந்தை வேண்டுமா வேண்டாமா போன்று எந்த விஷயத்திலும் தனி உரிமை என்பது இல்லை என்று ஆதாரங்களை அடுக்கி விவாதிக்கிறார் Sylvian Patrick.

ஆண்கள் பல கோணங்களில் பெண்கள் குறித்த கருத்துகளை எடுத்து வைத்தாலும் எல்லோரும் ஒரே குரலில் கூறியது அவர்களுடைய ஆதர்சப் பெண், அவரவருடைய 'அம்மா' என்பதுதான். தங்களுடைய எண்ணம், செயல் என்று அனைத்தும் தங்கள் அம்மாவின் வளர்ப்பினால் வந்ததே என்றார்கள்.

ஆண்கள், 'தாய்' என்கிற பெண்களால் உருவாக்கப்படும் பிம்பங்களே என்பது தெளிவு. ஆண்-பெண் சம உரிமை, சுதந்திரம் போன்றவை வேறெங்கும் இல்லை. இவற்றை சமூகப் பழக்கத்தில் கொண்டுவருவது ‘அம்மா’ வாகிய பெண்களிடம் தான் இருக்கிறது. அவற்றை நிலை நிறுத்தும் வகையில் பாட திட்டங்களும் வடிவமைக்கப் படவேண்டும் என்பது அவசியம்.

**By Banu Gomes**

---

## ஆக்கபூர்வ தலைமை குறித்து டாக்டர் அப்துல் கலாம் கூறுவது..

1. தலைவனுக்கு நோக்கம் குறித்த தெளிவான பார்வை இருக்க வேண்டும்.
2. நோக்கத்தை செயல்படுத்துவதில் மிகுந்த ஆர்வமும், விருப்பமும் இருக்கவேண்டும்.
3. புது விஷயங்களை அறிந்து கொள்வதிலும், செய்துபார்ப்பதிலும் தயக்கம் கூடாது.
4. தோல்வியை சுனக்கமின்றியும், வெற்றியை அமைதியாகவும் கையாளத் தெரியவேண்டும்.
5. முடிவுகள் எடுப்பதில் தயக்கமில்லாத தைரியம் வேண்டும்.
6. பெருந்தன்மையுடன் கூடிய நிர்வாகத் திறமை வேண்டும்.
7. தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டும்.
8. நோக்கத்தை செயல்படுத்துவதிலும், வெற்றியை அடைவதிலும் நேர்மையை கடைபிடிக்க வேண்டும் .

# சமஸ்கிருதம்- 22ஆம் நூற்றாண்டின் அறிவியல் மொழி?

கடந்த நாற்பது வருடங்களாக கணிப்பொறி "செயற்கை நுண்ணறிவு"க்கு( Artificial intelligence) ஏற்ற செயற்கை மொழி ஒன்றை வடிவமைப்பதற்கு விஞ்ஞானிகளால் அதிக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த செயற்கை மொழிக்கும் ஏதேனும் ஒரு இயற்கை மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதா என்று தேடும் பொழுது விஞ்ஞானிகளுக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது!

கிட்டத்தட்ட 1,000 ஆண்டுகள் ஒரு நாட்டில் பேச்சு வழக்கில் இருந்த ஒரு மொழி, நீண்ட தத்துவ மற்றும் இலக்கண மரபையும் தாண்டி மொழி செயலாக்கம், அறிவியல் அமைப்பு, நவீன கணிதத்திற்கு ஏற்ற அமைப்பு மற்றும் பல அறிவியல் சார்ந்த அமைப்புகளை தெளிவாக, நுணுக்கமாக கொண்ட ஒரே மொழி சமஸ்கிருதம் என்று கண்டுபிடித்தனர்.
1985 இல் ரிக் ப்ரிக்க்ஸ்(NASA) என்பவர் சமஸ்கிருதம் இயந்திர மொழிபெயர்ப்பிற்கு ஏற்ற மொழி என்று கண்டறிந்தார். அவர் தனது பதிப்பில் 'ஏன் சமஸ்க்ரிதம் செயற்கை நுண்ணறிவுக்கு ஏற்றது??' என்று தெளிவாக விளக்கி உள்ளார்.



சமஸ்கிருதத்தில் நீண்ட நெடிய வாக்கியத்தை, அதன் பொருள் மாறாமல், பிழை இல்லாமல் மிக குறைந்த சொற்களில் வெளிப்படுத்தலாம். உதாரணமாக சமஸ்கிருத இலக்கண நூல் 8 அத்தியாயத்தை கொண்டது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் 4 பிரிவுகள் உள்ளது. மொத்தம் 4000 சூத்ராக்களில் இலக்கண விதி கள் கூறப்பட்டுள்ளது. கடினமான விதிகள் மிக குறைந்த சொற்களால் கூறப்பட்டுள்ளது. சமஸ்கிருத "குறிவிலக்கம் மற்றும் குறியாக்கம்"(decoding and encoding) நவீன இயந்திர மொழிக்கு ஒத்துபோகிறது என்று கண்டு பிடிக்க பட்டுள்ளது.

உதாரணத்திற்கு ஒரு எளிய வாக்கியத்தை எடுத்து கொள்ளலாம் "Caitra goes to the village." (graamam gacchati caitra) - பெயர்ச்சொல், வினைச்சொல் மற்றும் பொருள் மாறாமல் குறைந்த வார்த்தைகளால் கூறமுடிகிறது.

Source: [http://www.vedicsciences.net/articles/sanskrit-nasa.html](http://www.vedicsciences.net/articles/sanskrit-nasa.html)
"6th generation computer" மற்றும் "7th generation computer" சமஸ்கிருத பின்னணியை கொண்டு உருவாக்கபடுகிறது. இந்த திட்டம் 2025 மற்றும் 2034 ஆம் ஆண்டில் முடிவடையும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதற்கு பிறகு கணினி துறையில் மற்றும் ஓர் புரட்சி ஏற்படும்...
அது மட்டும் அல்லாமல் சமஸ்கிருதம் ரஷ்யவில் பயன்படுத்தப்படும் "Kirilian Photographic techniques" இலும் உபயோகிக்கப்படுகிறது.

அமெரிக்க ஹிந்து பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் சமஸ்கிருத த்யானம் பல நோய்களை குணப்படுத்துகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.. இது நாம் அறிந்த விஷயம் என்றாலும் அது பல பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலும் மாணவர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது என்பது நிறைவைத்தரும் செய்தி. அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அடுத்த வரும் சந்ததியர்களில் பலர் சமஸ்கிருதம் அறிந்திருப்பர் என்கிறது ஒரு ஆய்வு.
இத்தனை அறிவியல் சிறப்புகளை கொண்ட நம் நாட்டு மொழியையும், பல சிறப்புகளை கொண்ட நம் தாய் தமிழ் மொழியையும் விட்டு விட்டு ஆங்கிலம் மட்டும்தான் எதிர்காலம் என்று கூறுபவர்கள் சற்று சிந்திக்க வேண்டிய தருணம் வந்தாயிற்று என்றே தோன்றுகிறது.
**-By** கு. ப்ரதீப்

# சுமித்ரா – கல்பெட்டா நாராயணன் எழுதிய 'இத்ர மாத்ரா ' என்ற மலையாள நாவலின் தமிழ் மொழியாக்கம் – ஒரு பார்வை

எல்லோர் வாழ்விலும் பெண்கள் இருக்கிறார்கள். அம்மாவாய், தங்கையாய், அக்காவாய், தோழியாய், மனைவியாய், இன்னும் பலவாக. அவ்வாறான பெண்களின் அனைத்துக் கூறுகளையும் நம்மால் அறிய முடியுமா? உதாரணமாக, என் தங்கையை எனக்கு தங்கையாய் மட்டுமே தெரியும். அவள் மணமான பின் எவ்வாறான மனைவியாய் இருப்பாள் எனவோ, இல்லை எப்படிப்பட்ட தோழியாய் இருப்பாள் எனவோ என்னால் முழுவதுமாக அறிய முடியாது. என்னதான் நான் நினைத்தாலும் அவளிடம் கேட்டறிந்தாலும் எதோ ஒன்று குறையும்.



அவ்வாறாக, ஒரு பெண்ணின் அனைத்துக் கூறுகளையும் பிரித்துக் காட்டியது சுமித்ரா என்ற நாவல். சுமித்ரா எனும் 38 வயதுப் பெண் இறந்து போகிறாள். சற்றும் தகவலின்றி மரணம் அவளை அணைத்துக் கொள்கிறது. அவளுடன் வாழ்ந்த அனைவருக்கும் அவளை எரிக்கும் வரை அவளுடன் இருக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. இவ்வளவுதான் நாவல். மலையாளத்தில் கல்பெட்டா நாராயணன் எழுதிய ”த்ர மாத்ரா (அவ்வளவுதான்)” என்ற நாவல், தமிழில் சுமித்ராவாக கே.வி. ஷைலஜா அவர்களின் கைவண்ணத்தில் வெளி வந்திருக்கிறது.

முதல் அத்தியாயத்திலேயே சுமித்ரா இறந்து விடுகிறாள். பின்பு அவள் மற்றவர்களுக்கு விட்டுச் சென்ற நினைவுகளே நாவலாக நீள்கின்றன. அவளது விருப்பு வெறுப்புகள், பாச நேசங்கள், நம்பிக்கைகள் என அனைத்தையும் பிற கண்களின் வாயிலாக காணும் பொழுது நமக்கு தெரிந்த பெண்களை நமக்கு எவ்வளவு தூரம் தெரியும் என நம்மில் கேள்விகள் எழுகிறது.

இரண்டாம் அத்தியாயத்தில் மரணத்தைப் பற்றி வரும் ஒரு பத்தி மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு துக்க வீட்டுக்குள் நாம் செல்லும் பொழுது நம் மனது நினைக்கும், ஆனால் வாய் சொல்ல மறுக்கும் விஷயங்களை தயவு தாட்சணியமின்றி எழுதித் தள்ளியிருக்கிறார். மரணம் போலவே இரக்கமில்லாத ஒரு நடை அந்தப் பத்திக்கு மேலும் வலுக்கூட்டுகிறது!

அன்பு செலுத்துபவர்கள் இன்னும் பெரிய அன்பின் அலைகள் நெஞ்சில் எழுவதை உணர்வார்கள். மரண வீட்டின் நிகழ்வுகள் அழுத்தமானவை. அங்கு கடன் கேட்டுப் பாருங்கள் கிடைப்பதற்கு சாத்தியங்கள் அதிகம். தவறு செய்தவர்களின் தவறுகளின் சுமை ஏறும். மரண வீடு பிரமாண்டமானதொரு பின்புலம். மரண வீட்டின் சுவர்களில் மோனோலிசாவின் புன்னகை மேலும் மர்மமாக பரவி வருவதை தெளிவாகப் பார்க்கலாம். மரணம் நமக்கு பல விஷயங்களை அழுத்திச் சொல்கிறது.

வயநாட்டில் வாழ்க்கைப்பட்ட, ஒரு சிறு பெண்ணினது வாழ்க்கைக் கதை என்னதான் சுவாரசியமாக இருக்கும் என மக்கள் நினைக்கலாம். ஆனால் என்னுடையதும் உங்களுடையதும் போல சுமித்ராவின் வாழ்வும் மிக யதார்த்தமான, சுவாரசியமிக்க ஒரு பயணம் தான். ஒரு பெண்ணாய், தோழியாய், மனைவியாய், தாயில்லாத தந்தை உடல் நலம் குன்றிய பையனுக்கு ஒரு பெரியம்மா போல, யாரும் அற்ற ஒரு கிழவருக்கு சேவகியாய் எல்லாரும் எடுக்கும் அவதாரங்களை அவள்

எடுத்திருக்கிறாள். ஆனால் கல்பெட்டா நாராயணனைப் போல் நமக்கு யாரும் அழகிய உரைநடை எழுதுவது தான் சிரமம்.

எவ்வளவோ அன்பைக் குடுத்தாலும், அவளிடம் அன்பையும் பிறவற்றையும் வாங்கியவர்கள் மீண்டும் அவள் பூதவுடலிடமும் ஏதோ தேடுகிறார்கள். அவர்களுக்கு அது கிடைக்க வாய்ப்பில்லை எனினும். அம்மாவை இழந்த புருசு அம்மாவையும், யாரும் அற்ற பெரியவர் ஒரு மகளையும் அவள் இறந்த பின்னும் தேடுகிறார்கள். பெண்கள் வாழ்வே இப்படித்தான். எப்போதும் அவர்களிடம் நாம் எதையாவது எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறோம். அவர்களும் குடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். தீர்ந்து போனாலும். சுமித்ராவின் வாழ்வின் ரசனைகளைப் பற்றிச் சொல்லும் பொழுது நாராயணன் இப்படிச் சொல்கிறார்... "அவளுக்கு வீட்டை விட நெல் கொட்டி வைக்கும் பழங்கலம் இஷ்டம்".
காந்தியை அல்ல நேருவை, நசீரை அல்ல மதுவை, ஜேசுதாசை அல்ல ஏ.எம் ராஜாவை, சோறல்ல பொரியலை, கஞ்சியல்ல அதன் தொடுபொருளைப் போல, வீட்டையல்ல பழங்கலத்தைத் தான் அவளுக்கு மிகவும் பிடிக்கும் இதைப் படித்து முடிக்கும் பொழுதே பழங்கலத்தை அவள் எவ்வாறு நேசித்தாள் என நமக்கு புரிந்துவிடும்.

தாயாய், தாரமாய், தங்கையாய், அக்காவாய் இருந்தாலும் உயிர் போனபின் அது வெறும் பிணம்தான். இது அனைவருக்குமே தெரியும். செய்தி அறிந்தவுடன் ஒருவராய், ரெண்டு பேராய், கூட்டமாய் வந்தவர்கள், வெயில் ஏற ஏற பொறுமை இழந்து இதை எரித்தால் வேலை முடிந்து செல்லலாமே என யோசிக்கத் துவங்குவார்கள். துவங்குகிறார்கள். எரிக்கும் வரைக்கும் அவளைப் பற்றியும் அவளிடமும் இருந்த நினைவுகள் எரியும் பொழுதே கரைந்து அனைவரும் தத்தமது வேலைகளை கவனிக்க துவங்குகிறதாக முடிகிறது நாவல்.

நாவலை முடித்து விட்டு ஒரு 5 விநாடி அப்படியே அமர்ந்திருந்தேன். பின் முதல் பக்கத்தை மீண்டும் வாசித்தேன்.

யக்ஷன்: இந்தப் பூவுலகின் மிகப் பெரும் வியப்பு என்ன?
தருமன் : ஒவ்வொரு நாளும் மக்கள் மனித வாழ்வு முடிந்து யமனின் கோட்டைக்கு சென்று கொண்டே இருக்கிறார்கள். ஆனாலும் இந்த பூலோகத்தில் எஞ்சி இருப்பவர்கள் தங்களுக்கொன்றும் நஷ்டம் இல்லை என்றும், இங்கே நிலையாக தங்கிவிடுவோமென்றும் நினைக்கிறார்கள். இதைவிட வியப்பு என்ன இருக்கிறது?

இப்பொழுது யக்ஷனும், தர்மனும் என்னைப் பார்த்து வியந்து கொண்டிருப்பார்கள்.

பிரகதீஷ் பிரசன்னா

---

PRESENSE

எமது பிப்ரவரி 2013 மாத ஆங்கில மின் இதழ் ***PreSense***ஐ பதிவிறக்கம் செய்து படிக்க

www.prpoint.com/ezine/presense0213.pdf

# உலக திரைப் படங்கள் வரிசையில் ...
# ஒன்ஸ் அபான் எ டைம் இன் அனடோலியா –துருக்கி திரைப்படம் – ஒரு அறிமுகம்.

ஹாலிவுட் தவிர உலகின் பல இடங்களில் இருந்து வெளிவரும் படங்கள் மிகவும் ஆழமானதாகவும் அழகாகவும் இருக்கின்றன. ஆனால் மொழிப் பிரச்சினை காரணமாக பல நல்ல படங்களைத் தவற விட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது உள்ள தொழில்நுட்பத்தின் உதவியால் பல மொழிகளின் சப்டைட்டில்களோடு இந்தப் படங்களைப் பார்த்து ரசிக்க முடிகிறது. அப்படி பார்க்க ஒரு படம்தான் இந்த ஒன்ஸ் அபான் அ டைம் இன் அனடோலியா.




ஒரு மிக அமைதியான குளிர் நிறைந்த ராத்திரியில் படம் துவங்குகிறது. நீளமான ஒளி சிதறல்களை முகப்பு விளக்குகள் மூலம் சிந்திக் கொண்டு 3 வாகனங்கள் வருகின்றன. அதில் ஒரு கொலைகாரனும், அவனுக்கு உதவிய அவன் தம்பியும் இருக்கிறார்கள். குடிபோதையில் நண்பனைக் கொன்று புதைத்து விட்டு போலீஸிலும் சரணடைந்தவனை, போலீஸ் பிணத்தை புதைத்த இடத்தைக் காட்ட அழைத்து செல்கிறார்கள். பரிசோதனை செய்ய ஒரு டாக்டர், அவருடன் ஒரு வக்கீல் மற்றும் சில உதவியாளர்களோடு பயணம் இருக்கிறது. புதைத்த இடத்தை குடிபோதையில் கொன்றவர்கள் மறந்ததால், இந்தப் பயணம் இரவைத் தாண்டி நீள்கிறது. காலையில் பிணத்தை தேடி கண்டுபிடித்து பிரேதப் பரிசோதனை செய்து முடிக்கிறார்கள். கதை இவ்வளவே.

ஒரு பிணத்தை தேடிப் போகும் ஒரு குழுவுக்கும் அது செய்யும் வேலைகளும் அப்படி என்ன சுவாரசியமாக இருக்கப் போகிறது என நீங்கள் நினைக்கலாம். அங்குதான் இயக்குனரின் திறமை வெளிப்படுகிறது. இரவும், அதன் சூழலும், பணியின் காரணமான அயர்ச்சியும் குடும்ப சூழ்நிலைகளும் அந்தக் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் எப்படி சிந்திக்க வைக்கின்றன என மிக அழகாக இயக்குனர் வெளிப்படுத்துகிறார். படத்தில் வருவது இரண்டே இரண்டு பெண் பாத்திரங்கள். ஆனால் படம் முழுவதும் பெண்களைப் பற்றியதைப் போலவே ஒரு பிரமை நமக்கு ஏற்படுகிறது. அதுவுமில்லாமல் படத்தில் வரும் ஆண்கள் அனைவருமே ஒரு வித வெறுமையில் இருக்கிறார்கள். தானே கணித்த நேரத்தில் மரணத்தைத் தழுவிய ஒரு பெண் பற்றி பேசிக்கொண்டே இருக்கும் வக்கீல், காதலியைப் பிரிந்த டாக்டர், உடல்நலம் பாதிக்கப்பட்ட மகனை உடைய இன்ஸ்பெக்டர் என அனைவருமே அப்பொழுதுள்ள தன் வாழ்க்கையில் மிகவும் அயர்ச்சி அடைந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

இவ்வாறனவர்கள் ஒரே இடத்தில், அதுவும் இது போன்ற அலுவல் காரணமாக மாட்டிக் கொள்ளும் பொழுது, அந்த ஒரு இரவு அவர்களுக்கு என்ன தருகிறது என்பது தான் படம். ஒரு ஆரம்பம், கதை வினியோகம், திருப்பம்,திருப்பத்தின் காரணம், முடிவு என்ற டெம்ப்ளேட் படங்களைப் பார்த்துப் பழகியவர்களுக்கு இந்தப் படம் ஒரு புதிய அனுபவமாக இருக்கும்.

இயக்குனருக்கு ஒளிப்பதிவாளரும் ஒலிப்பதிவாளரும் பக்கபலமாய் இருக்கிறார்கள். சில சமயங்களில் திரைப்படம் தான் பார்க்கிறோமா, இல்லை நேர்த்தியாக வரையப்பட்ட பல ஓவியங்களின் தொகுப்பைப் பார்க்கிறோமா என நமக்கு சந்தேகம் வர வைக்கிறார் ஒளிப்பதிவாளர். தன்னிடம் உள்ள கருவிகள் பழையதாகிவிட்டது என புலம்பிக் கொண்டே ஒருவர் பிணத்தை அறுக்கும் காட்சியில் ஒலிப்பதிவின் மூலம் ஒரு விஷயத்தை நமக்கு இப்படி உணர்த்த முடியுமா என வியக்க வைக்கிறார் ஒலிப்பதிவாளர்.

ஒரு நல்ல புத்தகம் போல படமும் உங்களை ஆட்கொள்வதை, உங்களிடம் கேள்விகள் எழுப்புதை நீங்கள் விரும்பினால், நீங்கள் தவற விடாமல் பார்க்க வேண்டிய படம் இது.

IMBD Link - http://www.imdb.com/title/tt1827487/?ref_=sr_4 **By பிரகதீஷ் பிரசன்னா**

# சட்டீஸ்கர் ரேஷன் விநியோகத்தில் புதுமை – பாடம் கற்குமா மற்ற மாநிலங்கள்?

திரு.ஜகத் சட்டீஸ்கர் தலைநகர், ராய்பூரில் ரிக்க்ஷா இழுப்பவர். குடும்ப தலைவர். ஒரு நல்ல நாளில், அவர் ரூ 200 வரை சம்பாதிக்க முடியும்; மோசமான நாட்களில், அவர் ரூ 100க்கே போராட வேண்டும்இந்த . பணம் அவருடைய ஆறு பேர் கொண்ட குடும்பத்திற்கு சாப்பாட்டுக்கு சரியாக இருக்கும். அவர் ஒரு நாள் அல்லது இரண்டு வேலை வெளியே போக முடியாது என்றால், நிதி அழுத்தம் வீட்டில் கழுத்தை நெரிக்கும். சில மாதங்களுக்கு முன்பு வரை, இவர் ஒவ்வொரு மாதமும் ஒரு கஷ்டத்தை எதிர்கொள்ள நேரும் . அரிசி, கோதுமை, சர்க்கரை, மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை நியாய விலை கடைகள் மூலம் ஒவ்வொரு மாதமும் மலிவு விலையில் வாங்கி பிழைப்பை நடத்தி வருகிறார் இந்த கடைகள் முன் .எப்பொழுதும் நீண்ட வரிசை நின்று கொண்டே இருக்கும் .அவருடைய ரேஷன் கடை ஒதுக்கீடு பெற நாள் முழுக்க வரிசையில் காத்திருந்த காலங்கள் பல. சில நேரங்களில், மூன்று நாட்கள் வரை காத்திருக்க வேண்டும் .பிழைப்பு நடத்துவதா அல்லது ரேஷன் கடையில் நிற்பதா என்று திண்டாடிய நாட்கள் உண்டு.




ஆனால் இப்போது அவருக்கு அத்தகைய கவலை ஒன்றும் இல்லை. காரணம், சட்டீஸ்கர் மாநிலத்தில் செய்ய பட்டு இருக்கும் புரட்சிகரமான திட்டம். சட்டீஸ்கர் அரசு பொது விநியோக முறையை சீர்திருத்தி புதுமையான திட்டத்தை தொடங்கி உள்ளது. இதன் மூலம் கறுப்பு சந்தை மற்றும் ஊழல் அறவே ஒழிக்கப் படுகிறது. திரு.ஜகத் போன்ற ஏழைகளுக்கு எந்த தொந்தரவும் இல்லாத வாழ்க்கையை வழிவகை செய்யக் கூடிய அற்புதமான திட்டத்தை அந்த மாநில அரசு செயல்படுத்தியுள்ளது. **"CORE PDS"** என்று பெயரிடபட்டுள்ள இந்த திட்டம் சமீபத்திய தகவல் தொழில்நுட்ப கருவிகளை அடிப்படையாக கொண்டு ஸ்மார்ட் கார்டுகளின் உதவியுடன் செயல் படுகிறது. ஒவ்வொரு ரேஷன் கடையிலும் எவ்வளவு சரக்கு இருக்கிறது என்று ஒவ்வொரு நாளும் கண்காணிக்க படும்.

**இந்த திட்டத்தின் செயல்பாடு பற்றி சற்று விரிவாக பார்க்கலாம்:**

பாரம்பரிய ரேஷன் அட்டைகளுக்கு பதிலாக திரு.ஜகத் போன்ற பொது மக்களுக்கு அவரது ரேஷன் உரிமத்தை கொண்ட ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஸ்மார்ட் கார்டுகளில் ஒவ்வொரு குடும்பத்தின் அனைத்து தகவல்களும் பதிவேற்றம் செய்ய பட்டு இருக்கும். ஒவ்வொரு மாதமும் அந்த குடும்பத்தின் கணக்கில் எத்தனை பொருட்கள் பெற பட்டுள்ளது இன்னும் எத்தனை பாக்கி உள்ளது போன்ற அனைத்து விவரங்களும் இந்த ஸ்மார்ட் கார்டுகளில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள ரேஷன் கடைகள் அனைத்தும் செயற்கைகோள் மூலம் இணைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு ரேஷன் கடையில் மக்கள் வரிசையில் இருந்தால்; மற்றொரு ரேஷன் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி கொள்ளலாம். இது நவீன வங்கியை போல். வாடிக்கையாளர்கள் எந்த கிளையில் வேண்டுமானாலும் சென்று பணத்தை போடவோ, எடுக்கவோ முடியும் அதே போல் எந்த ரேஷன் கடையில் வேண்டுமானாலும் சென்று பொருட்களை வாங்கி கொள்ளலாம். தற்போது இந்த திட்டம் மூலம் சுமார் 75,000 க்கும் மேற்பட்ட ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. வெற்றிகரமாக செயல் பட்டு கொண்டிருக்கும் இந்த திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மாநிலத்தின் அனைத்து நகரங்கள் மற்றும் கிராமங்களில் செயல்பாட்டில் இருக்கும்.

ரேஷன் கடைகள் கணிப்பொறி மூலம் எவ்வுளவு சரக்கு பெற பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு முறையும் தெரிவிக்க வேண்டும்; அதை அரசாங்க கிடங்கில் உடனடியாக சரி பார்க்கப் பட்டு பதிவு செய்து கொள்ளப் படுகிறது.



இந்த திட்டத்திற்கு முன்பு, கணினிமையம் ஆக்கபடாத போது சரக்குகளை கொண்டு செல்லும் போது திருட்டு ஏற்படும். அது மட்டும் இன்றி அரசாங்க கிடங்கில் இருந்து கொடுக்கப் படும் சரக்கும்; ரேஷன் கடைக்கு போய் சேரும் சரக்கும் சரியாக இருக்கிறதா என்பதை கண்டறிவது மிக கடினம். தற்போது இந்த தவறுகள் அறவே தடுக்கப் படுகிறது. அது மட்டும் இன்றி ஸ்மார்ட் கார்டுகள் மூலம் ஒவ்வொரு ரேஷன் கடையிலும் எத்தனை பொருட்கள் பெறப்பட்டுள்ளன என்பதை துல்லியமாக பார்க்க முடியும்.

கணினிமையம் செய்யாத பட்சத்தில் ரேஷன் கடைகாரர் பணத்திற்கு ஆசை பட்டு மக்களுக்கு கொடுத்ததாக கணக்கு காட்டி கள்ள சந்தையில் பொருட்களை விற்பது என்பது நாடு முழுவதும் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் நடந்து கொண்டிருக்கும் அதிகார வர்கத்தின் கொடுமை.

**வெற்றிகரமான திட்டம்:**

ஒரு திட்டம் என்று எடுத்து கொண்டால், அது தீட்டப்படுவது என்பது வேறு வெற்றிகரமாக செயல் படுத்தப் படுவது வேறு. இந்த “CORE PDS” முறை அமல் படுத்தப்பட்ட பிறகு இது போன்ற ஏமாற்று வேலைகள் செய்ய முடியாது. தற்போது அமல் படுத்தப்பட்டது வரை திட்டம் திருப்திகரமாக இருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். தில்லியில் எரிபொருள் நிலையங்களில் விற்கப்படும் அரைவாசி பெட்ரோல்; ரேஷன் கடைகளில் இருந்து திருடப்படும் மண்ணெண்ணெயுடன் கலப்படம் செய்யப் படுவதாக நம்பப்படுகிறது.

குறைந்த பட்சம் 40% ரேஷன் பொருட்கள் கள்ள சந்தைக்கு போவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இங்கே தேசிய ஊழல் ஒரு ஆண்டிற்கு ரூ 16,000 கோடி வரை இருக்க கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டு உள்ளனர். சுதந்திரம் பெற்ற நாள் முதல் நடைபெற்று வரும் இத்தகைய மாபெரும் அக்கிரமத்திற்கு தீர்வு கிடைக்கும் வகையில் முன்மொழிய பட்டிருக்கும் இந்த திட்டத்தை ஒரு புரட்சி என்று கூறலாம்.

**ரேஷன் கார்டுகள் கணினிமயம்:**

சட்டிஸ்கரில் ரேஷன் கார்டுகளை கணினிமயமாக்கும் பணி 6 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பட்டு 2007-08 ல் முடிக்கப்பட்டது.

பயனாளியின் கோரிக்கையின் படி, ரேஷன் கடைக்காரர் அவர் வாங்க விரும்பும் பொருட்களை கணினியின் மூலம் பதிவேற்றம் செய்வார். அதன்படி ரசீது அச்சிடப்படும் பிறகு பொருட்கள் பயனாளியிடம் வழங்கப்படும். இதை “அன்னப்பூர்னா ஏடிஎம்” (தானியங்களை எடுக்கும் ஏடிஎம்) என பெயரிட்டுள்ளனர்.

பயனாளிகள் ஊரில் எந்த ரேஷன் கடையில் வேண்டுமானாலும் பொருட்களை வாங்க முடியும். அவர் ஒரு கடையில் கோதுமை வாங்கவும் மற்றொரு கடையில் இருந்து சர்க்கரை வாங்கவும் சுதந்திரம்

உண்டு. அவர் வாங்கும் பொருட்களின் விவரங்கள் எல்லா நேரங்களிலும் ஸ்மார்ட் கார்டில் தோன்றும்.

திரு.தஹ்ஹஷில் என்பவர் ஒரு தனியார் கம்பெனியில் பணி புரிகிறார். அவர் கூறுவது "ரேஷன் அட்டை இருந்த போது பொருட்களை வாங்க குடும்ப தலைவர் ரேஷன் கடைக்கு போக வேண்டியிருந்தது அனால் இப்போது என் குழந்தைகள் கடைக்கு ஸ்மார்ட் கார்டு எடுத்து சென்று எந்த பிரச்சனையும் இல்லாமல் ரேஷன் வாங்கி வருகின்றனர்". இதை போன்று மற்ற மாநில மக்களும் தங்கள் மாநிலத்திற்கு இந்த திட்டம் செயல்ப் படுத்த படாதா என்று ஏங்குகின்றனர்.

பல ஆண்டுகளாக ஆட்டம் ஆடிய ரேஷன் கடைகாரர்கள் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்தது மட்டும் இன்றி மக்களை திண்டாடவும் செய்துள்ளனர். ஆனால் சட்டீஸ்கரில் அதெல்லாம் பழைய கதை ஆகிவிட்டது. ராய்ப்பூர், சக்தி நகரில் தங்கியிருக்கும் திருமதி.பிரதான் தனது பகுதியில் கடைக்காரர் ஒரு மாதம் பொருட்களை வாங்க தவறினால்; அடுத்த மாதம் ரேஷன் கொடுக்க முடியாது என்று கூறுவதாக சொல்கிறார். மேலும் திருமதி.பிரதான் கூறுவதாவது "நாங்கள் ஏழைகள், தினசரி ஊதியம் சார்ந்து வாழ்க்கை நடத்தி வருகிறோம்" சில நேரங்களில், திருமதி.பிரதான் போன்ற மக்கள் ரேஷன் வாங்க போதுமான பணம் இல்லாமல் இருப்பதும் உண்டு. முன்னதாக, அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். ஆனால் இப்போது ஒரு ரேஷன் கடைகாரர் சரி இல்லை என்றால் மக்கள் மற்றொரு கடையை நோக்கி நகர முடியும்.

**ரேஷன் கடைகள் மத்தியில் போட்டி:**
சட்டீஸ்கரில் பல வரவேற்பில்லாத ரேஷன் கடைகள் மூட பட்டுள்ளன. சட்டீஸ்கர் உணவு மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநர் திரு.கௌச்லேந்திரா சிங் கூறுவதாவது "CORE PDS திட்டம் தொடங்கிய பின்னர், ராய்ப்பூரில் சுமார் 25 கடைகள் மூடப்பட்டிருக்கும், ரேஷன் கடை ஒதுக்கீடு பங்கு 25 சதவீதம் உயர்த்த வேண்டும் என்று நிபந்தனை உள்ளது அதை நிறைவேற்றாத இந்த ரேஷன் கடைகள் மூடப்பட்டுள்ளது".

இது ரேஷன் கடைகள் மத்தியில் போட்டியை நிலவ செய்கிறது. இந்த போட்டி ரேஷன் கடைகாரர்களை தரமான பொருட்களை வைத்துக் கொள்ளவும் வாடிக்கையாளர்களிடம் ஒழுங்காக நடந்து கொள்ளவும் உதவுகிறது.

**மொபைல் ரேஷன் வேன்கள்:**
இந்த திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து மொபைல் ரேஷன் கடைகள் தொடங்க பட்டுள்ளது. மொபைல் ரேஷன் வேன்கள் நகரத்தை சுற்றி நகரும்; அந்த வேனில் அனைத்து ரேஷன் பொருட்களும் இருக்கும். ரேஷன் கடைகளில் அடிக்கடி சில பொருட்கள் கிடைப்பது இல்லை. அனால் இந்த மொபைல் வேனில் அனைத்து பொருட்களும் கிடைப்பதாகவும் இது ரேஷன் கடைகளில் உள்ள பற்றாக்குறை சமாளிக்க உதவுகிறது என்று மக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில், அரசு பெறப்படும் புகார்களில் 25 சதவீதம் ரேஷன் கடை முறைகேடுகள் தொடர்பானவை. ஆனால் இப்போது ராய்ப்பூரில், இத்தகைய புகார்கள் கிட்டத்தட்ட பூஜ்யமாக குறைந்துள்ளதாம்.

தமிழகத்திலும் கடந்த பல ஆண்டுகளாக ஸ்மார்ட் கார்டு தருவதாக கூறி வருகிறார்களே தவிர ஒன்னும் நடந்த பாடு இல்லை. ஆனால் முன்பு மிகவும் பின்தங்கிய மாநிலமாக கருதப்பட்ட சத்தீஸ்கர் மாநிலம் தற்போது இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல் படுத்திய பிறகாவது நமது தலைவர்கள் சற்று யோசிக்க வேண்டும்.
**By எஸ்.ஜி.சூர்யா**

## ஆசிரியர் குழு



பிரைம் பாயிண்ட்
சீனிவாசன்,
தலைமை ஆசிரியர்



பானு கோம்ஸ்,
ஆசிரியர்



ஜி. பிரதீப்



இளங்கோ

## ஆசிரியர் குழு – வழிகாட்டுபவர்கள் (Editorial Mentors)



வி. பொன்ராஜ்



ஓம் முருகன்



ஜே. பிரபாகர்


**Published by**

**Prime Point Foundation, Chennai**

**Please send your feedback to**

**newgenthamizhan@gmail.com**

**Please also read our English Ezine at**

**www.corpezine.com**



Disclaimer: The views and opinions expressed in this ezine are those of the authors / contributors and do not necessarily reflect the views and opinions of the Publishers and Editorial Team members.